போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,

SEPTEMBER 18, 1923.

ந. 17 (3).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923 ம்௵ ஸெப்டெம்பர்மீ 18௳. [விலை, 6 பை.

இந்தியா கவர்ன்மெண்ட் ஆக்டுகள்

ACTS OF THE GOVERNMENT OF INDIA.

இந்திய சட்டநிருபண சபையாரால் செய்யப்பட்டு கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆக்டுகள்.

இந்தியா கவர்ன்மெண்ட்.

சட்டநிருபண இலாகா.

இந்திய சட்டநிருபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1923-ம்௵ ஜூலைமீ 25௳ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

ACT No. XXVI OF 1923.

1923-ம்௵த்து 26-வது ஆக்ட்.

AN ACT FURTHER TO AMEND THE CODE OF CIVIL PROCEDURE, 1908, FOR CERTAIN PURPOSES.

1908-ம்௵த்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தை சில காரியங்களுக்காகப் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

1908-ம்௵த்து 5-வது ஆக்ட்.

1908-ம்௵த்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தை இதில் பின்னால் கண்ட சில காரியங்களுக்காகப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, ஸிவில் ப்ரொஸீஜர் கோடைக்குறித்த 1923-ம்௵த்து (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

1908-ம்௵த்து 5-வது ஆக்ட்.

1908-ம்௵த்து 5-வது ஆக்ட் 60-வது பிரிவில் திருத்தம்.

2. 1908-ம்௵த்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் 60-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (i) அடையாளமிட்ட பகுதியில், "இருபது" என்னும் வார்த்தை வருகிற இடங்களிலெல்லாம் அதற்கு பர்த்தியாக "நாற்பது" என்னும் வார்த்தையையும், "நாற்பது" என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக "எண்பது" என்னும் வார்த்தையையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1923-ம் ௵ ஜூலை௴ 25௳ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

ACT No. XXVII OF 1923.
1923-ம் ௵த்து 27-வது ஆக்ட்.

AN ACT FURTHER TO AMEND THE INDIAN INCOME-TAX ACT, 1922, FOR CERTAIN PURPOSES.

1922-ம் ௵த்திய இந்துதேசத்து வருமான வரி ஆக்டை சில காரியங்களுக்காகப் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

1922-ம் ௵த்திய இந்துதேசத்து வருமான வரி ஆக்டை இதில் பின்னால் கண்ட சில காரியங்களுக்காகப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

1922-ம் ௵த்து 11-வது ஆக்ட்.

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, இந்துதேசத்து வருமான வரியைக் குறித்த 1923-ம் ௵த்து (பின்னும் திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

1922-ம் ௵த்து 11-வது ஆக்ட் 4-வது பிரிவில் திருத்தம்.

1922-ம் ௵த்து 11-வது ஆக்ட்.

2. (இதில் பின்னால் ஷை ஆக்ட் என்று குறிப்பிடப்படும்) 1922-ம் ௵த்திய இந்துதேசத்து வருமான வரி ஆக்ட் 4-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில், "ஆதாயமும் லாபமும்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "அவை ப்ரிடிஷ இந்தியாவுக்குள் பெற்றுக் கொள்ளப்பட்டாலும் கொண்டுவரப்பட்டாலும் ப்ரிடிஷ இந்தியாவில் சேர்ந்துவந்திருப்பதாக அல்லது ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுவது மல்லாமல்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொண்டு, "ப்ரிடிஷ் இந்தியாவுக்குள்" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக, "அந்தப்படி" என்னும் வார்த்தையை அமைத்துக் கொள்ளவேண்டும்.

1922-ம் ௵த்து 11-வது ஆக்டில் 5A அத்தியாயத்தைப் புதிதாய் அமைத்துக்கொள்வது.

3. ஷை ஆக்ட் 5-ம் அத்தியாயத்துக்குப் பிறகு அடியிற்கண்ட அத்தியாயத்தை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

"5A அத்தியாயம்.

சில வகைகளைச் சேர்ந்த கப்பல் வியாபாரத்துக்குச் சம்பந்தப்பட்ட விசேஷ நிபந்தனைகள்.

சிற்சில சமயங்களில் நடத்தும் கப்பல் வியாபாரம் வரிக்குள்ளாவது.

44-A. இந்த ஆக்டிற்கண்ட வேறே நிபந்தனைகளில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இந்த அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகள் - ப்ரிடிஷ் இந்தியாவுக்கு வெளியே வாசம் செய்துகொண்டு யாதொரு கப்பலின் சொந்தக்காரராகவாவது சார்ட்டர் என்னும் குத்தகை பெற்றவராகவாவது யாதொரு வருஷத்தில் ப்ரிடிஷ் இந்தியாவில் வியாபாரம் நடத்தும (இந்த அத்தியாயத்தில் பின்னால் முதலாளி என்று குறிப்பிடப்படும்) யாதொரு நபர் விஷயத்திலே வரி விதித்து வசூலிக்கும் காரியத்துக்காகப் பிரயோகப்படும்; ஆனால், அப்படிப்பட்ட முதலாளிக்கு ஏஜென்ட் ஒருவர் இருக்கிறாரென்றும் பிரஸ்தாப வரியை இந்த ஆக்டிற்கண்ட இதர நிபந்தனைகளின்படி அடுத்த வருஷத்தில் அவரிடமிருந்து வசூலிக்கக்கூடுமென்றும் வருமான வரி உத்தியோகஸ்தர் தெரிந்து திருப்தியடைந்தால், ஷை நிபந்தனைகள் பிரயோகப்படமாட்டா.

ஆதாயத்தையும் லாபத்தையும் குறித்த ரிடர்ன்.

44B. (1) எந்தக் கப்பலின் விஷயத்தில் இந்த அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படுகின்றனவோ அந்தக் கப்பல் ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள யாதொரு ரேவை விட்டுப் போவதற்கு முன் அந்தக் கப்பலின்-மாஸ்டரானவர் - அந்த ரேவுக்கு ஷை கப்பல் கடைசியாய் வந்து சேர்ந்தது முதல் அங்கே கப்பலில் ஏற்றப்பட்ட சகல பிரயாணிகள், ஜீவஜந்துக்கள் அல்லது சாமான்களையும் கொண்டுபோவதனிமித்தம் முதலாளிக்காவது அவர் சார்பில் யாதொரு நபருக்காவது செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படத்தக்க தொகை முழுவதும் கண்டிருக்கும் ரிடர்ன் ஒன்றைத் தயார்செய்து வருமான வரி உத்தியோகஸ்தருக்குச் சவதரிக்கவேண்டும்.

(2) ஷை ரிடர்னைப் பெற்றுக்கொண்டதன்மேல் வருமான வரி உத்தியோகஸ்தர் - (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட தொகை இவ்வளவென்று மதிப்பிடவேண்டும்; மேலும், அவர் - இது காரியத்துக்காக தமக்கு வேண்டியிருக்கக்கூடிய கணக்குகளையாவது தஸ்தவேஜுகளையாவது ஹாஜர்ப்படுத்தும்படி கேட்கலாம்; அல்லாமலும், அந்தப்படி

மதிப்பிடப்பட்ட தொகையில் இருபதில் ஒரு பாகம் - பிரஸ்தாப ரேவிலே கப்பலில் ஏற்றப்பட்ட பிரயாணிகளையும் ஜீவஜந்துக்களையும் சாமான்களையும் கொண்டுபோவதனிமித்தம் முதலாளிக்குச் சேர்ந்துவந்திருக்கும் ஆதாயம், லாபம் ஆகிய இவைகளின் தொகையாயிருப்பதாகக் கருதப்படும்.

(3) ஆதாயமும் லாபமும் மேலேகண்டபடி மதிப்பிடப்பட்டால், வருமான வரி உத்தியோகஸ்தரானவர் - அதன்மேல் வரியாகச் செலுத்தப்படக்கூடிய தொகையை, அந்தந்த காலத்தில் யாதொரு கம்பெனியின் மொத்த வரும்படிக்குப் பிரயோகப்படக்கூடிய வீதப்படி நிச்சயிக்கவேண்டும்; அந்தத் தொகையைப் பிரஸ்தாப கப்பலின் மாஸ்டர் செலுத்தவேண்டியவராவார்; மேலும், கஸ்டம் கலெக்டராவது போர்ட் க்ளியரென்ஸ் என்னும் பயணச்சீட்டு கொடுக்கக் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே உத்தியோகஸ்தராவது ஷை வரி கிரமமாய்ச் செலுத்தப்பட்டிருக்கிறதென்று தெரிந்து திருப்தியடைகிற வரையில், பிரஸ்தாப கப்பலுக்குப் பயணச்சீட்டு கொடுக்கப்படமாட்டாது.

சரிக்கட்டுவது 44 C. இந்த அத்தியாயத்தின்படி தமக்காக யாதொரு தொகை செலுத்தப்பட்டிருக்கும் வருஷத்துக்கு அடுத்த எந்த வருஷத்திலாவது யாதொரு முதலாளியானவர் முந்திய வருஷத்தில் தம்முடைய மொத்த வருமானத்தை மதிப்பிடவேண்டுமென்றும், அதை ஆதாரமாகக்கொண்டு செலுத்தப்படத்தக்க வரியை இந்த ஆக்டில் கண்ட இதர நிபந்தனைகளை அனுசரித்து நிச்சயிக்கவேண்டுமென்றும் சுதந்தரித்துக் கேட்பதற்கு இந்த அத்தியாயத்தில் கண்டதெதனாலும் தடையுண்டாவதாகக் கருதக்கூடாது; மேலும், அவர் அந்தப்படி சுதந்தரித்துக் கேட்கிறபட்சத்திலே, மேலேகண்ட பிரகாரம் செலுத்தப்பட்ட யாதொரு தொகையை வரி விஷயமாக முன்னதாய்ச் செலுத்தப்பட்ட தொகையாகக் கொள்ளவேண்டியதுமல்லாமல், அந்தப்படி செலுத்தப்பட்ட தொகைக்கும் அவர் செலுத்த வேண்டியதாகத் தெரியவந்த தொகைக்குமுள்ள வித்தியாசத்தை சந்தர்ப்பத்துக்கேற்றபடி அவர் செலுத்தவேண்டும் அல்லது அவருக்கு வாபஸ் செய்துவிடவேண்டும்.''

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1923-ம்௵ ஜுலை௴ 25௳ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

ACT No. XXVIII of 1923.

1923-ம்௵த்து 28-வது ஆக்ட்.

AN ACT TO REPEAL THE ACTS WHICH PROVIDE FOR THE LEVY OF A CESS ON INDIGO EXPORTED FROM BRITISH INDIA.

ப்ரிடிவ்ஷ் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் நீலமருந்தின்மேல் வரி விதிப்பதற்காக நிபந்தனை கண்டிருக்கும் ஆக்டுகளை ரத்துசெய்வதற்கான ஆக்ட்.

ப்ரிடிஷ் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் நீலமருந்தின்மேல் வரி விதிப்பதற்காக நிபந்தனை கண்டிருக்கும் ஆக்டுகளை ரத்துசெய்வது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயரும் வழங்கத் தொடங்குவதும்.

1. (1) இந்த ஆக்டை, 1923-ம்௵த்து நீலமருந்து வரி (ரத்து செய்வதற்கான) ஆக்ட் என்று சொல்லலாம்.

(2) இது - 1923-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் முதல் தேதியன்று செலாவணியாகத் தொடங்கவேண்டும்.

ரத்து.

1918-ம்௵த்து 3-வது ஆக்ட். 1921-ம்௵த்து 5-வது ஆக்ட்.

2. 1918-ம்௵த்து நீலமருந்து வரி ஆக்டும், 1921-ம்௵த்து நீலமருந்து வரி (திருத்துவதற்கான) ஆக்டும் இதனால் ரத்து செய்யப்படுகின்றன.

இந்திய சட்ட நிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது 1923-ம் வருஷம் ஜூலை மீ 27வ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது:—

ACT No. XXIX OF 1923.
1923-ம் வருஷத்து 29-வது ஆக்ட்.

AN ACT FURTHER TO AMEND THE CODE OF CIVIL PROCEDURE, 1908.

1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தைப் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தைப் பின்னும் திருத்துவது யுக்தமா யிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிற தென்னவென்றால்:— 1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, ஸிவில் ப்ரொஸீஜர் கோடைக் குறித்த 1923-ம் வருஷத்து (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

1908-ம் வருஷத்து 5-வது ஆக்டின் 1-வது ஷெட்யூலிலுள்ள 21-வது அதிகாரத்தைச் சேர்ந்த 32-வது விதியில் திருத்தம்.

2. 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோடின் முதல் ஷெட்யூலிலுள்ள (இதில் பின்னால் ஷை அதிகாரமென்று குறிப்பிடப்படும்) 21-வது அதிகாரத்தைச் சேர்ந்த 32-வது விதியிற்கண்ட (1) குறிப்பிட்ட உபவிதியில், "அந்த டிக்ரியை" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:— 1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

"விவாக சம்பந்தமான சுதந்தரங்களை மறுபடியும் கொடுத்துவிடுவதற்கான டிக்ரியின் விஷயத்திலே, அவருடைய சொத்தை ஜப்தி செய்வதனாலாவது, யாதொரு உடன்படிக்கைப் பிரகாரம் குறித்த மட்டில் முடித்துக்கொடுப்பது அல்லது யாதொரு இன்ஜங்ஷன் என்னும் கட்டளை சம்பந்தமான டிக்ரியின் விஷயத்திலே".

1908-ம் வருஷத்து 5-வது ஆக்டின் 1-வது ஷெட்யூலிலுள்ள 21-வது அதிகாரத்தைச் சேர்ந்த 33-வது விதியில் திருத்தம்.

3. ஷை அதிகாரத்தைச் சேர்ந்த 33-வது விதியிலே,—

(a) (1) குறிப்பிட்ட உபவிதியில், "மறுபடி கொடுத்துவிடும்படி" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு "புருஷன்மேல்" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்; மேலும், "சிறைச்சாலையில் மறியல் செய்து வைப்பதனால் அந்த டிக்ரியை நிறைவேற்றக் கூடாதென்று" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "இந்த விதியில் நிபந்தனை கண்டிருக்கிற மாதிரியாய் அந்த டிக்ரியை நிறைவேற்றவேண்டுமென்று" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும்; அல்லாமலும்,

(b) (2) குறிப்பிட்ட உபவிதியில், "பிறப்பித்திருந்து டிக்ரி பெற்றவர் மனைவியாயிருக்கிறபட்சத்திலே" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "பிறப்பித்திருந்தால்" என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1923-ம் வருஷம் ஜூலை மீ 31வ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

ACT No. XXXII OF 1923.

1923-ம் வருஷத்து 32-வது ஆக்ட்.

AN ACT FURTHER TO AMEND THE INDIAN LUNACY ACT, 1912.

1912-ம் வருஷத்திய இந்துதேசத்து பைத்தியக்காரர்களைக் குறித்த ஆக்டைப் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

1912-ம் வருஷத்து 4-வது ஆக்ட். 1912-ம் வருஷத்திய இந்துதேசத்து பைத்தியக்காரர்களைக் குறித்த ஆக்டைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர். 1. இந்த ஆக்டை, 1923-ம் வருஷத்திய இந்துதேசத்து பைத்தியக்காரர்களைக் குறித்த (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

1912-ம் வருஷத்து 4-வது ஆக்ட். 1912-ம் வருஷத்து 4 - வது ஆக்ட் 20-வது பிரிவில் திருத்தம். 2. 1912-ம் வருஷத்திய இந்துதேசத்து பைத்தியக்காரர்களைக் குறித்த ஆக்ட் 20-வது பிரிவுடன் அடியிற்கண்ட விலக்கு நிபந்தனையைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் ; அதாவது:—

" ஆனால், சேர்த்துக்கொள்வதற்கான உத்தரவு எதுவும்—

(a) அது பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள் பைத்தியக்காரர் அதில் கண்டிருக்கும் இடத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, அந்தக் கால அளவு கழிந்துபோன பிறகாவது,

(b) ஷை இடத்திலிருந்தாகிலும் பைத்தியக்காரர் எந்தப் பாதுகாப்புச் சாலைக்கு அப்புறப்படுத்தப்பட்டிருக்கக்கூடுமோ அந்தப் பாதுகாப்புச் சாலையிலிருந்தாகிலும் இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி அவர் விடுதலை செய்யப்பட்ட பிறகாவது

செலாவணியாய்க்கொண்டிருக்கமாட்டாது."

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1923-ம் வருஷம் ஜூலை மீ 31வ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

ACT No. XXXV OF 1923.

1923-ம் வருஷத்து 35-வது ஆக்ட்.

AN ACT FURTHER TO AMEND THE CODE OF CRIMINAL PROCEDURE, 1898.

1898-ம் வருஷத்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்றவிசாரணைச் சட்டத்தைப் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

1898-ம் வருஷத்து 5-வது ஆக்ட். சில க்ரிமினல் கோர்ட்டுகளில் நியாயவாதம் செய்யும் உரிமையை முக்தியார்களுக்குக் கொடுப்பதும், அது காரியத்துக்காக 1898-ம் வருஷத்து க்ரிமினல் ப்ரோஸீஜர் கோட் என்னும் குற்ற விசாரணைச் சட்டத்தைப் பின்னும் திருத்துவதும் யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர். 1. இந்த ஆக்டை, க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடைக் குறித்த (பின்னும் திருத்துவதற்கான) 1923-ம் வருஷத்து ஆக்டென்று சொல்லலாம்.

2. 1898-ம் வருஷத்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் 4-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (r) அடையாளமிட்ட பகுதியில், "ப்ளீடரென்று" என்னும் வார்த்தைக்கு பர்த்தியாக "ப்ளீடர் அல்லது முக்தியாரென்று" என்னும் வார்த்தைகளையும், "யாதொரு முக்தியார் முதலிய" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "வேறே யாதொரு" என்னும் வார்த்தைகளையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

1898-ம் வருஷத்து 5-வது ஆக்ட் 4-வது பிரிவில் திருத்தம்.

1898-ம் வருஷத்து 4-வது ஆக்ட்.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1923-ம் வருஷம் ஆகஸ்ட்மீ 3உ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

ACT No. XXXVI OF 1923.

1923-ம் வருஷத்து 36-வது ஆக்ட்.

AN ACT FURTHER TO AMEND THE INDIAN PAPER CURRENCY ACT, 1923.

1923-ம் வருஷத்திய இந்துதேசத்து நோட் செலாவணி ஆக்டைப் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

1923-ம் வருஷத்திய இந்துதேசத்து நோட் செலாவணி ஆக்டைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

1923-ம் வருஷத்து 10-வது ஆக்ட்.

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, 1923-ம் வருஷத்திய இந்துதேசத்து நோட் செலாவணியைக் குறித்த (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

1923-ம் வருஷத்து 10-வது ஆக்ட் 18-வது பிரிவில் திருத்தம்.

1923-ம் வருஷத்து 10-வது ஆக்ட்.

2. (இதில் பின்னால் ஷை ஆக்ட் என்று குறிப்பிடப்படும்) 1923-ம் வருஷத்திய இந்துதேசத்து நோட் செலாவணி ஆக்ட் 18-வது பிரிவைச் சேர்ந்த (8) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a) அடையாளமிட்ட பகுதியில் "அந்த விலைப்படி" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக அடியிற்கண்ட வார்த்தைகளை அமைத்துக்கொள்ள வேண்டும் ; அவையாவன :—

"அந்த விலைப்படியாவது, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் கட்டளையின்படி வெளிவிடப்பட்ட வெள்ளி நாணயத்தை உருக்குவதால் கிடைத்த (வெள்ளி) கட்டியின் விஷயத்தில் ட்ராய் என்னும் நிறை அளவைப்படி 165 க்ரெயின் கொண்ட சுத்த வெள்ளிக்கு ஒரு ரூபாய் வீதப்படியாவது".

1923-ம் வருஷத்து 10-வது ஆக்ட் 19-வது பிரிவில் திருத்தம்.

3. ஷை ஆக்ட் 19-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவுடன் அடியிற்கண்ட விவரணத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் ; அதாவது :—

"**விவரணம்.**—இந்த உட்பிரிவின் காரியங்களுக்காக, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் கட்டளையின்படி வெளிவிடப்பட்ட வெள்ளி நாணயத்தை உருக்குவதால் கிடைத்த வெள்ளிக்கட்டியைக் கிரயத்துக்கு வாங்குவதற்காகச் செலவு செய்யப்படும் தொகையானது - ட்ராய் என்னும் நிறை அளவைப்படி 165 க்ரெயின் கொண்ட சுத்த வெள்ளிக்கு ஒரு ரூபாய் வீதம் கணக்கிடுவதால் வெள்ளிக்கட்டிக்கு ஏற்படும் மதிப்பாகக் கருதப்படும்."

1923-ம் வருஷத்து 10-வது ஆக்ட் 20-வது பிரிவில் திருத்தம்.

4. ஷை ஆக்ட் 20-வது பிரிவில், "ஐந்து கோடி" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "பன்னிரண்டு கோடி" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1923-ம் வருஷம் ஆகஸ்ட்மீ 5வ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

ACT No. XL OF 1923.

1923-ம் வருஷத்து 40-வது ஆக்ட்.

AN ACT FURTHER TO AMEND THE INDIAN ELECTRICITY ACT, 1910.

1910-ம் வருஷத்திய இந்துதேசத்து மின்சார ஆக்டைப் பின்னும் திருத்துவதற்கான ஆக்ட்.

1910-ம் வருஷத்து 9-வது ஆக்ட்.

1910-ம் வருஷத்திய இந்துதேசத்து மின்சார ஆக்டைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, 1923-ம் வருஷத்திய இந்துதேசத்து மின்சார (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

1910-ம் வருஷத்து 9-வது ஆக்ட்.

1910-ம் வருஷத்து 9-வது ஆக்டில் 29 A பிரிவைப் புதிதாய் அமைத்துக்கொள்வது.

2. 1910-ம் வருஷத்திய இந்துதேசத்து மின்சார ஆக்ட் 29-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

ரெயில்வேக்களால் பராமரிக்கப்பட்டுவரும் ஆகாயத் தந்திகளுக்கு 18-வது பிரிவு பிரயோகப்படுவது.

1890-ம் வருஷத்து 9-வது ஆக்ட்.

"29 A. 18-வது பிரிவைச் சேர்ந்த (3), (4) குறிப்பிட்ட உட்பிரிவுகளிலும் அதனுடன் சேர்ந்திருக்கும் விவரணத்திலும் கண்ட நிபந்தனைகள் - அவைகளில் லைஸென்ஸ்தாரரைக் குறித்துச் சொல்லியிருப்பவை ரெயில்வே பரிபாலகர்களைக் குறித்துச் சொல்லப்பட்டவைகளாயிருந்தாலெப்படியோ அப்படியே, 1890-ம் வருஷத்திய இந்துதேசத்து ரெயில்வே ஆக்ட் 3-வது பிரிவில் அர்த்தம் சொல்லப்பட்டபடிக்குள்ள யாதொரு ரெயில்வே பரிபாலகர்களால் அமைக்கப்பட்டிருக்கும் யாதொரு ஆகாயத் தந்தியின் விஷயத்தில் பிரயோகப்படும்."

இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1923-ம் வருஷம் ஆகஸ்ட்மீ 5வ கவர்னர் ஜெனரலவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

ACT No. XLI OF 1923.

1923-ம் வருஷத்து 41-வது ஆக்ட்.

AN ACT TO AMEND THE CHARITABLE AND RELIGIOUS TRUSTS ACT, 1920.

தருமசம்பந்தமாயும் மதசம்பந்தமாயும் உள்ள ட்ரஸ்டுகளைக் குறித்த 1920-ம் வருஷத்து ஆக்டைத் திருத்துவதற்கான ஆக்ட்.

1920-ம் வருஷத்து 14-வது ஆக்ட்.

தரும சம்பந்தமாயும் மத சம்பந்தமாயும் உள்ள ட்ரஸ்டுகளைக் குறித்த 1920-ம் வருஷத்து ஆக்டைத் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர்.

1. இந்த ஆக்டை, தருமசம்பந்தமாயும் மதசம்பந்தமாயும் உள்ள ட்ரஸ்டுகளைக் குறித்த 1923-ம் வருஷத்து (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

1920-ம் வருஷத்து 14-வது ஆக்ட்.

1920-ம் வருஷத்து 14-வது ஆக்ட் 2-வது பிரிவில் திருத்தம்.

2. தருமசம்பந்தமாயும் மதசம்பந்தமாயும் உள்ள ட்ரஸ்டுகளைக் குறித்த 1920-ம் வருஷத்து ஆக்ட் 2-வது பிரிவில், "கோர்ட் என்று" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "கோர்ட் என்றாவது இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே யாதொரு கோர்ட் என்றாவது" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

எல். க்ராஹம்,
இந்தியா கவர்ன்மெண்ட் அபிஷியேடிங் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.